# MOU with ICSI - 2018

**The Times of India, Tiruchirappalli Edition, Dated:05.06.2018,**

## BDU, ICSI sign MOU

Bharathidasan University signed a memorandum of understanding with the Institute of Company Secretaries of India (ICSI) on 31st May 2018. This is the 20th MoU signed by ICSI. The MOU aims to improve quality of commerce education at under graduate-level in Bharathidasan University areas. ICSI would distribute awards and a cash prize of Rs 25,000 to the toppers in B Com. This will entitle the best performing student to registration fee waiver for executive programme stage of ICSI. The award winners will be selected every year from the present B Com students at non-autonomous colleges affiliated to Bharathidasan University. The department of commerce and financial studies will coordinate to identify the prize winners. Bharathidasan University registrar and the chairman of ICSI, Madurai chapter on behalf of ICSI signed the MoU.



**The Hindu, Tiruchirappalli Edition, Dated:04.01.2018, Page No:2**

**MoU signed**

Bharathidasan University has signed a memorandum of understanding with the Institute of Company Secretaries of India (ICSI) for improving quality of commerce education at the undergraduate level. ICSI would give away "ICSI Signature Award" with a certificate and medal worth ₹25,000 to the topper in B.Com in affiliated colleges of the university. It would also waive registration fee for the executive programme of ICSI for the top three students. The winners will be selected every year from non-autonomous colleges affiliated to the university. The Department of Commerce and Financial Studies will coordinate in identifying the winners. G. Gopinath, Registrar, Bharathidasan University, and P.K. Premkumar, Chairman of ICSI, Madurai Chapter, signed the MoU in the presence of P. Manisankar, Vice-Chancellor, Bharathidasan University.

**Dinamani, Tiruchirappalli Edition, Dated:02.06.2018, Page No:4**

## இந்திய நிறுவனச் செயலர்களின் நிறுவனத்துடன் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஒப்பந்தம்

திருச்சி, ஜூன் 1: வணிகவியல் கல்வியில் இளங்கலைப் படிப்புத் தரத்தை உயர்த்தும் வகையில் இந்திய நிறுவனச் செயலர்களின் நிறுவனத்துடன் திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் வியாழக்கிழமை புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டது.

பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் துணைவேந்தர் ப. மணிசங்கர் முன்னிலையில் பதிவாளர் கோபிநாத் கணபதியும், இந்திய நிறுவனச் செயலர்களின் நிறுவனத்தின் மதுரைப் பிரிவு தலைவர் பி.கே. பிரேம்குமாரும் புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு, பரிமாறிக் கொண்டனர்.



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாறிக் கொள்ளும் நிகழ்வில் பங்கேற்ற பல்கலைக்கழகத் துணைவேந்தர் ப.மணிசங்கர், பதிவாளர் கோபிநாத் கணபதி, இந்திய நிறுவன செயலர்களின் நிறுவனத்தின் மதுரைப் பிரிவுத் தலைவர் பி.கே.பிரேம்குமார் உள்ளிட்டோர்.

பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்குள்பட்ட கல்லூரிகளில் வணிகவியல் கல்வியில் குறிப்பாக இளங்கலைப் படிப்பு அளவில் தரத்தை உயர்த்துவதற்காக இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்துடன் இணைவுபெற்ற தன்னாட்சி பெறாத கல்லூரிகளில் பி.காம். முதல் இடம் பெறும் மாணவர்களுக்கு ரூ.25,000 மதிப்புள்ள பதக்கம் மற்றும் ஐ.சி.எஸ்.ஐ. கையொப்பமிட்ட விருது என்ற விருதும் வழங்கப்படும்.

மேலும் முதல் 3 இடங்களைப் பெறும் பி.காம். மாணவர்களுக்கு இந்திய நிறுவனச் செயலர்களின் நிறுவனத்தின் நிர்வாகப் படிப்பின் பதிவுக் கட்டணம் முழுமையாகத் தள்ளுபடி செய்து வழங்கப்படும்.

இந்த விருது தன்னாட்சிப் பெறாத கல்லூரிகளிருந்து விருதுக்குரிய மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணி மற்றும் விருது வழங்கும் நிகழ்வைப் பல்கலைக்கழக வணிகவியல் மற்றும் நிதிக் கல்வியியல் துறை நடத்தும்.

இந்த ஒப்பந்தம் செய்வது கொள்வதற்கான முயற்சிகளையும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் மேலாண்மையியல் புலத்தலைவர் முனைவர் மு.செல்வம், இந்திய நிறுவனச் செயலர்களின் செயலர் ராஜாவும் மேற்கொண்டனர்.

**Dinamalar, Tiruchirappalli Edition, Dated:01.06.2018, Page No:3**



திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் ஐசிஎஸ்ஐ இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடும் நிகழ்ச்சியில் துணைவேந்தர் மணிசங்கர், பதிவாளர் கோபிநாத் கணபதி, ஐசிஎஸ்ஐ மதுரை பிரிவு தலைவர் பிரேம்குமார், செயலாளர் ராஜா, மேலாண்மையியல் துறை புலத்தலைவர் செல்வம் ஆகியோர்.

## பாரதிதாசன் பல்கலை.யுடன் ஐசிஎஸ்ஐ நிறுவனம் ஒப்பந்தம்

திருச்சி, ஜூன் 1–

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், ஐசிஎஸ்ஐ நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் அதன் பதிவாளர் கோபிநாத் கணபதி, ஐசிஎஸ்ஐ மதுரை பிரிவு தலைவர் பிரேம்குமார் ஆகியோர் துணைவேந்தர் மணிசங்கர் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

ஐசிஎஸ்ஐ செயலாளர் ராஜா, மேலாண்மையியல் புலத்தலைவர் செல்வம் ஆகியோர் ஒப்பந்தத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டனர். இந்த ஒப்பந்தப்படி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற தன்னாட்சி பெறாத கல்லூரிகளில் பி.காம்., படிப்பில் முதலிடம் பிடிக்கும் மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பதக்கம் மற்றும் ஐசிஎஸ்ஐ விருது வழங்கப்படும்.

மேலும் முதல் மூன்று இடம் பெறும் பிகாம் மாணவர்களுக்கு ஐசிஎஸ்ஐ-ன் நிர்வாக படிப்பில் பதிவு கட்டணம் முழுமையாக தள்ளுபடியும் வழங்கப்படும். இந்த விருதுக்கு உரிய மாணவர்கள் பாரதிதாசன் பல்கலையுடன் இணைவு பெற்ற தன்னாட்சி பெறாத கல்லூரிகளில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

வணிகவியல் மற்றும் நிதிக்கல்வியியல் துறை விருதுக்குரியவர்களை தேர்ந்தெடுக்கும் செயலை ஒருங்கிணைத்து விருது வழங்கும் விழாவை நடத்தும்.

**Dailythanthi, Tiruchirappalli Edition, Dated:02.06.2018, Page No:08**

## பாரதிதாசன் பல்கலைக்கழகம் சார்பில் மாணவர்களுக்கு பதக்கம் வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்

திருச்சி,ஜூன்.2–

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் ஐ.சி.எஸ்.ஐ. நிறுவனத்திற்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் மணிசங்கர் ஐ.சி.எஸ்.ஐ. மதுரை பிரிவு தலைவர் பிரேம்குமார் ஆகியோர் கையெழுத்திட்டுள்ள இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற தன்னாட்சி பெறாத கல்லூரிகளில் பி.காம். படிப்பில் முதலிடம் பிடிக்கும் மாணவர்களுக்கு ரூ.25 ஆயிரம் மதிப்புள்ள பதக்கம் மற்றும் ஐ.சி.எஸ்.ஐ. விருது வழங்கப்படும். மேலும் முதல் 3 இடங்களை பெறும் பி.காம் மாணவர்களுக்கு ஐ.சி.எஸ்.ஐ.யின் நிர்வாக படிப்பில் பதிவு கட்டணம் முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த நிகழ்ச்சியில் பல்கலைக்கழக பதிவாளர் கோபிநாத் கணபதி, மேலாண்மையியல் துறை தலைவர் செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**Cauvery Times, Tiruchirappalli, Dated:08-14.06.2018, Page No:5**



பாரதிதாசன் பல்கலைக்கழகம் மற்றும் இந்திய நிறுவன செயலர்களின் நிறுவனமும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கடந்த 31ந் தேதி கையொப்பமிட்டது. இது, இந்திய நிறுவன செயலர்களின் நிறுவனத்திற்கு (ICSI)க்கு 20வது புரிந்துணர்வு ஒப்பந்தமாகும். பிற கல்வி நிறுவனங்களுடன் 19 ஒப்பந்தம் கையொப்பமிட்டுள்ளது. பாரதிதாசன் பல்கலைக்கழகத்திற்கு உட்பட்ட வணிகவியல் கல்வியில் குறிப்பாக இளங்கலை படிப்பு அளவில் தரத்தை உயர்த்துதல் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கமாகும். பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் பி.மணிசங்கர் முன்னிலையில் பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் கோபிநாத் கணபதி, ஐசிஎஸ்ஐ மதுரை பிரிவு சார்பில் அதன் தலைவர் சிஎஸ்.பி.கே.பிரேம்குமார் ஆகியோர் கையொப்பமிட்டனர். ஐசிஎஸ்ஐ செயலர் ராஜா மற்றும் பல்கலைக்கழக் மேலாண்மையியல் புலத்தலைவர் முனைவர் மு.செல்வம் ஆகியோர் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.